inspiriSYS®
Solutions Limited

ISL/SS/SE/34/2025-2026
08th November, 2025

The National Stock Exchange of India Limited Exchange Plaza, Plot No. C/1, G Block, Bandra-Kurla Complex, Bandra (East), Mumbai 400 051 **Symbol: INSPIRISYS**	BSE Limited Phiroze Jeejeebhoy Towers, Dalal Street, Mumbai 400 001 **Scrip Code: 532774**

Dear Sir / Madam,

Sub: Published Standalone and Consolidated Unaudited Financial Results for the quarter and year to date ended 30th September, 2025 in Newspapers.

Pursuant to Regulation 47 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015, please find enclosed the copy of newspapers advertisement with respect to Standalone and Consolidated Unaudited Financial Results for the quarter and year to date ended 30th September, 2025, approved in the Board Meeting held on 07th November, 2025 published in the following newspapers on 08th November, 2025:

i. Financial Express – English
ii. Makkal Kural – Tamil

This is for your information and records.

Thanking you,

For Inspirisys Solutions Limited

Inspirisys Solutions Limited Chennai 600 010

S.Sundaramurthy
Company Secretary & Compliance Officer

Encl : as above

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணி

கணக்கீட்டு படிவங்களை நிரப்புவதற்கு வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் உதவுவார்கள்: மாநகராட்சி கமிஷனர் தகவல்

சென்னை, நவ.8– வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணியின்போது கணக்கீட்டு படிவங்களை நிரப்புதற்கு வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் உதவுவார்கள் என மாநகராட்சி கமிஷனர் ஜெ.குமரகுருபரன் தெரிவித்தார்.

சென்னை மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணியின் நடவடிக்கையாக, வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் கணக்கெடுப்பு படிவம் வீடு வீடாக வாக்காளர்களுக்கு வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. இந்த பணிகளுக்கு 3 ஆயிரத்து 718 வாக்குச்சாவடி நிலை அலுவலர்களும், 2 வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு ஒரு மேற்பார்வையாளர் என 1,859 மேற்பார்வையாளர்களும் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் வாக்காளர்களின் வீடுகளுக்கு வரும்போது என்ன செய்வார்கள்? வாக்காளர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதன் விவரம் வருமாறு:

வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், வாக்காளர்களின் ஒவ்வொரு வீட்டுக்கும் நேரடியாக சென்று 27.10.2025 அன்றைய தேதியிட்ட வாக்காளர் பட்டியலில் உள்ள வாக்காளர்களின் விவரங்கள் அடங்கிய அச்சிடப்பட்ட கணக்கீட்டுப் படிவத்தின் 2 நகல்களை ஒவ்வொரு வாக்காளர்களுக்கும் வழங்குவார்கள்.

★இந்த படிவத்தில் கேட்கப்பட்டுள்ள வாக்காளர் விவரங்கள் மற்றும் முந்தைய சிறப்பு தீவிர திருத்த வாக்காளர் பட்டியலில் உள்ள வாக்காளர் மற்றும் வாக்காளரின் உறவினர் விவரங்களை சிரமமின்றி நிரப்புவதற்கு, வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் கடந்த 2002 மற்றும் 2005ம் ஆண்டு சிறப்பு தீவிர திருத்த வாக்காளர் பட்டியலை கொண்டு இந்த படிவத்தை நிரப்புவதற்கு உதவிடுவார்கள்.

★கணக்கெடுப்பின் போது, வாக்காளரின் வீடு பூட்டியிருந்தாலோ அல்லது வெளியே சென்றிருந்தாலோ கணக்கீட்டு படிவங்களை வழங்குவதற்கும், பூர்த்தி செய்த படிவங்களை திரும்ப பெறுவதற்கும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் 3 அல்லது 4 முறை வாக்காளர்கள் வீட்டுக்கு செல்வார்கள்.

2 படிவம்

★ வாக்காளர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட 2 கணக்கீட்டு படிவத்தில் ஒன்றினை தாங்கள் வைத்து கொண்டு, மற்றொன்றினை தங்களது வீட்டுக்கு வரும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் வழங்க வேண்டும். அவ்வாறு பெறப்பட்ட கணக்கீட்டுப் படிவத்துக்கு வாக்குச்சாவடி நிலை அலுவலரால் ஒப்புதல் வழங்கப்படும்.

இந்த பணி வருகிற டிசம்பர் 4ந் தேதி வரையில் நடைபெறும்.

எனவே, வாக்காளர்கள் எவ்வித பதற்றமுமின்றி தங்களது படிவங்களை பூர்த்தி செய்து வாக்குச்சாவடி நிலை அலுவலரிடம் மேற்கண்ட தேதிக்குள் வழங்கலாம். இந்த படிவங்கள் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் இந்திய தேர்தல் ஆணையத்தின் இணைய அலைபேசி மூலமாக பதிவேற்றம் செய்யப்படும் என சென்னை மாநகராட்சி கமிஷனரும், மாவட்ட தேர்தல் அலுவலருமான ஜெ.குமரகுருபரன் தெரிவித்தார்.

தமிழக சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட

95 சதவீத மசோதாக்களுக்கு 3 மாதத்துக்குள் அனுமதி வழங்கப்பட்டது: கவர்னர் மாளிகை அறிக்கை

சென்னை, நவ.8– தமிழக சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட 95 சதவீத மசோதாக்களுக்கு 3 மாதத்திற்குள் அனுமதி அளிக்கப்பட்டு உள்ளதாக கவர்னர் மாளிகை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக தமிழக கவர்னர் மாளிகை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு கவர்னர் ஒப்புதல் அளிக்க காலதாமதம் செய்வதாகவும், அவரது நடவடிக்கைகள் தமிழ்நாட்டு மக்களின் நலன்களுக்கு எதிரானதாக உள்ளதாகவும், சில ஆதாரமற்ற மற்றும் உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டுகள் பொதுவெளியில் வைக்கப்பட்டு உள்ளன.

கடந்த அக்டோபர் மாதம் 31ந்தேதி வரை கவர்னர் மாளிகையால் பெறப்பட்ட மசோதாக்களில் 81 சதவீத மசோதாக்களுக்கு கவர்னரால் ஒப்புதல் அளிக்கப்பட்டு உள்ளன. அதில் 95 சதவீத மசோதாக்களுக்கு 3 மாதங்களுக்குள் ஒப்புதல் அளிக்கப்பட்டு உள்ளது. 13 சதவீத மசோதாக்கள் ஜனாதிபதியின் பரிசீலனைக்காக அனுப்பி வைக்கப்பட்டு உள்ளன. அதில் 60 சதவீத மசோதாக்கள் மாநில அரசின் பரிந்துரையின் பேரில் அனுப்பி வைக்கப்பட்டு உள்ளன. மீதமுள்ள மசோதாக்கள் அக்டோபர் மாதத்தின் இறுதியில் பெறப்பட்டு, பரிசீலனையில் உள்ளன. 10 மசோதாக்கள், கவர்னரால் நிறுத்தி வைக்கப்பட்டதாக அரசுக்குத் தெரிவிக்கப்பட்டன.

தமிழக மக்களின் நலனுக்காக...

இருப்பினும், இந்த மசோதாக்கள் மீண்டும் சட்டசபையால் நிறைவேற்றப்பட்டு, மீண்டும் சமர்ப்பிக்கப்பட்டபோது, அவை நாடாளுமன்ற சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட பல்கலைக்கழக மானியக் குழுவின் விதிகளுக்கு முரணாக இருந்ததாலும், அவை மாநில சட்டசபையின் வரம்பிற்கு அப்பாற்பட்டதாகக் கருதப்பட்டதாலும், கவர்னர் அந்த மசோதாக்களை, ஜனாதிபதியின் பரிசீலனைக்காக அனுப்பி வைத்தார். கவர்னர் சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்தவும், தமிழ்நாட்டு மக்களின் நலன்களைப் பாதுகாக்கவும், ஒவ்வொரு மசோதாவையும் உரிய கவனத்துடன் ஆய்வு செய்துள்ளார்.

கவர்னர் ஆர்.என்.ரவி இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி இயங்குவதையும், அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள கடமைகளைப் பின்பற்றி, மாநில மக்களின் நலன்களைக் காப்பதிலும், உண்மையாகவும், வெளிப்படைத்தன்மையுடனும் செயல்பட்டுள்ளார்.

மேலும், தமிழர் பாரம்பரியம், கலை மற்றும் இலக்கியத்தை முன்னிலைப்படுத்தும் ஆன்மிக, கலாசார மற்றும் மொழி சார்ந்த முன்னெடுப்புகளுக்கு ஆதரவளித்து வருகிறார்.

இது தமிழர் பண்பாட்டின் மீது கவர்னரின் ஆழ்ந்த மரியாதையை வெளிப்படுத்துகிறது. கவர்னர் இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டு தமிழக மக்களின் நலனுக்காக தொடர்ந்து பணியாற்றி வருகிறார்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் ரகசியமாக அணுசக்தி நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது: இந்தியா குற்றச்சாட்டு

புதுடெல்லி, நவ.8 பாகிஸ்தான் பல தசாப்தங்களாக ரகசியமாக அணுசக்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக இந்தியா குற்றம் சாட்டியுள்ளது.

அமெரிக்கா மீண்டும் அணு ஆயுத பரிசோதனையில் ஈடுபடப்போவதாக சமீபத்தில் டிரம்ப் அறிவித்தார். அப்போது, பாகிஸ்தான் உள்ளிட்ட பல நாடுகள் அணு ஆயுத சோதனையில் ஈடுபட்டதையும் சுட்டிக்காட்டி இருந்தார். டிரம்பின் இந்த அறிவிப்புக்கு பதிலளிக்கும் வகையில், பாகிஸ்தான் தொடர்ந்து ரகசியமாக அணுசக்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக இந்தியா கூறியுள்ளது.

இது தொடர்பாக டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால், பாகிஸ்தானின் அணு ஆயுத பரவல் மற்றும் அந்த நாட்டின் அணு ஆயுத தந்தை என அழைக்கப்படும் ஏ.ஹியூ. கானின் சட்டவிரோத நடவடிக்கைகள் குறித்தும் இந்தியா தொடர்ந்து சர்வதேச கவனத்துக்கு எடுத்துச் சென்று வருவதாக தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது:

பாகிஸ்தான் வரலாற்றில் ரகசியமான மற்றும் சட்ட விரோத அணு ஆயுத நடவடிக்கைகளை எப்போதும் அந்த நாடு தொடர்ந்து கொண்டு இருக்கிறது.

இது பல தசாப்தங்களாக கடத்தல், ஏற்றுமதி கட்டுப்பாட்டு மீறல்கள், ரகசிய கூட்டாண்மைகள், ஏ.ஹியூ. கான் நெட்வொர்க் மற்றும் மேலும் பெருக்கத்தை மையமாகக் கொண்டது.

பாகிஸ்தானின் இத்தகைய நடவடிக்கை தொடர்பாக இந்தியா எப்போதும் சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்த்து வருகிறது. இந்த பின்னணியில் பாகிஸ்தானின் அணு ஆயுத சோதனை தொடர்பான ஜனாதிபதி டிரம்பின் கருத்துகளை நாங்கள் எடுத்துக்கொண்டு இருக்கிறோம்.

இவ்வாறு ரந்தீர் ஜெய்ஸ்வால் கூறினார்.

கடந்த 2021ம் ஆண்டு மறைந்த ஏ.ஹியூ. கான், அணு மற்றும் ஏவுகணை தொழில்நுட்பங்களை வழங்குவதற்கான சர்வதேச நெட்வொர்க்கை அமைத்ததில் முக்கியமானவர் என குற்றம் சாட்டப்பட்டு இருந்தார். மேலும் சர்வதேச கறுப்புச் சந்தையுடன் தொடர்புடையவர் என்றும், வட கொரியா மற்றும் ஈரான் போன்ற நாடுகளுக்கு அணு தொழில்நுட்பத்தை வழங்க உதவியதாகவும் கூறப்படுகிறது.

விசாரணைக்கு ஆஜராக நடிகர் ஸ்ரீகாந்துக்கு அமலாக்கத்துறை சம்மன்

சென்னை, நவ.8– போதைப்பொருள் வழக்கில் நடிகர்கள் ஸ்ரீகாந்த், கிருஷ்ணா ஆகியோர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். தற்போது ஜாமீனில் உள்ள அவர்கள் இருவர் மீதும் முறைகேடான பணபரிமாற்ற தடை சட்டத்தின் கீழ் அமலாக்கத்துறையும் வழக்குப்பதிவு செய்துள்ளது. அவர்களை விசாரணைக்கு ஆஜராக அமலாக்கத்துறை சம்மன் அனுப்பியிருந்தது. நடிகர் கிருஷ்ணா ஆஜரான நிலையில், விசாரணைக்கு ஆஜராக கால அவகாசம் கேட்டு நடிகர் ஸ்ரீகாந்த் சார்பில் அமலாக்கத்துறையிடம் கடிதம் கொடுக்கப்பட்டது. இந்த நிலையில் விசாரணைக்கு ஆஜராகுமாறு ஸ்ரீகாந்துக்கு 2வது முறையாக அமலாக்கத்துறை சம்மன் அனுப்பியுள்ளதாக தெரியவந்துள்ளது.